சர்வதேச **HIV/AIDS** தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடாத்தப்பட்ட திறந்த மட்டத்திலான கட்டுரைப்போட்டியில் முதலாமிடம் பெற்றுக்கொண்ட



**திரு. பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**

**ஆசிரியர், கொக்குவில் இந்து கல்லூரி**

**யாழ்ப்பாணம்**

# யாழ் மாவட்டத்தில் மாறிவரும் சமூக சூழலும் HIV / AIDS எதிர் கொள்வதற்கான சவால்களும்.

## அறிமுகம்

இன்றைய உலகலாவிய சமூகச் சூழலின் முதன்மை சவாலாக எச்.ஐ.வி / எயிட்ஸ் நோய் பரவலடைந்து வருகின்றது. தேசிய அரசுகளினதும் பிராந்திய அரசுகளினதும் நீட்சித் தன்மை கொண்டதாக இந்நோயின் தாக்கம் மாற்றம் பெற்றுள்ளது. துரித சமூக மாற்றங்கள், சமூக அசைவியக்கங்கள், உலக ஒழுங்கு விரிவாக்கங்கள் இதனை உந்து விசைகளாக்கியுள்ளன. பூகோளமயமாக்கல் பின்னணியிலான சமகால சமூக நிலவரத்தில் எமது பிரதேசமாகிய யாழ்மாவட்டமும் விதிவிலக்காக இயங்க முடியாது. உலக ஒழுங்குகளுக்கு ஏற்ப அசைவியக்கம் பெறல், மாற்றங்களுக்கு உள்ளாதல் தவிர்க்க முடியாததாகியுள்ளது. இத்தகைய பின்னணியில் இக் கட்டுரை “யாழ்மாவட்டத்தில் மாறிவரும் சமூக சூழலும் HIV / AIDS ஐ எதிர்கொள்வதற்கான சவால்களும்” என்னும் தலைப்பில் சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆராயப்படுகின்றது.

## எயிட்ஸ் தினமும்முதன்மை கருப்பொருள்களும்

“எயிட்ஸ் தினம்” எற்றிய எண்ணவாக்கம் 1988இல் இடம் பெற்ற எயிட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர் மாநாட்டில் முகிழ்ப்பு பெற்றது. இதன்படி ஐக்கிய நாடுகள் சபை டிசம்பர் முதலாம் திகதி எயிட்ஸ் தினமாக சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தியது. அன்று தொட்டு அரசுகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் உலகலாவிய ரீதியில் நோய் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் செய்திட்டங்களை நடைமுறைப்படுத்தலாயின. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை முதன்மைப்படுத்தின. அந்த வகையில் 2005 முதல் 2010 வரை “எயிட்ஸை நிறுத்து சத்தியத்தை காப்பாற்று” என்பதாக அமைகின்றது.

இலங்கையின் மிலேனியம் அபிவிருத்தி இலக்கு “2015 ஆண்டளவில் எச்.ஐ.வி / எயிட்ஸ் நோயினை நிறுத்தி அதன் பரம்பலை பின்திருப்பல்” என்பதாக அமைகின்றது. ஐ.நா.சபை. அங்கத்துவ நாடுகள் 2015 இல் இந் நோயிற்கு எதிராக போராடுதல் பற்றியும் “பிள்ளைகளுக்கு பொருத்தமான உலகம்” என்ற அடிப்படையில் செயலாற்றுவதை முதன்மை தொலை நோக்காக கொண்டு பணிக்கூறுகளை முதன்மைப்படுத்தியுள்ளன. இத்தகைய பின்னணியில் உலகளாவிய

எயிட்ஸ் நோயை எதிர்ப்பைக் குறிக்கும் “சிவப்பு நாடாச் சின்னம்” அல்லது “உலக எயிட்ஸ் விழிப்புணர்வுத் தினம்” முதன்மை பெறலாயின.

## எயிட்ஸ் / எச்.ஐ.வியும் மாறிவரும் சமூக சூழலும்

மாறிவருகின்ற சமூக சூழல் என்ற எண்ணக்கரு உலகமயமாக்கல், நவீனமயமாக்கல், போட்டி சமூக அபிவிருத்தி சிந்தனையின் பின்னணியில் இருந்து உருவாக்கம் பெறுவதாக அமைகின்றது. மாற்றம் என்ற பதம் அபிவிருத்தியை சுட்டுகின்றது. இந்த மாற்றம் அதாவது அபிவிருத்தி நன்மைக்கானதாக அமைதல் முக்கியமாகின்றது. இன்று அபிவிருந்தி என்ற நிலமையில் மேற்கொள்ளப்படும் தொலைநோக்கற்ற செயற்பாடுகள் சமூகச் சூழலின் நீண்டகால இயங்காற்றலை கூறுபோடுவதாக அமைவதையும், சமூக ஒழுங்கிலும், சமூக கட்டமைப்பிலும், தனிமனித சமூக விருத்தியிலும் எதிர்மறைத் தாக்கங்களை விளைவிக்கின்றதை உணர முடிகின்றன. சமூக நலத்துறை சார்ந்த தாக்கமாகவும் மாறிவரும் சமூகச் சூழலில் வேகமாக பரவிவரும் நோயாகவும் இனங்காண முடிகின்றது.

மாற்றம் அல்லது அபிவிருத்தி என்பது நீண்டகால சமூக நிலவுகைக்கு நன்மையளிப்பதாக அமைதல் வேண்டும். ஆனால் மாறிவரும் சமூக சூழல் நிலவரம் தரமான அபிவிருத்தி, தரமான வாழ்க்கை பண்புச் சுட்டிநிலை, நிலைத்து நிற்கக் கூடிய அதாவது பேண்தரு அபிவிருத்திப் போக்குகளை கேள்விக்குறியாக்கும் வகையிலும், ஆரோக்கியமான சமூக உருவாக்கம், உறுதியான எதிர்கால சந்ததி விருத்தியாக்கத்தில் சவால்களையும், பலவீனங்களையும் உருவாக்கும் பிரதான காரணியாக இந்நோயின் தாக்கம் வலுப்பெற்று வருகின்றதை அவதானிக்க முடிகின்றது இத்தகைய மாறிவரும் போக்குகள் யாழ்.மாவட்ட சமூக சூழலில் பிரதிபலிப்பதையும், அதன் மூலம் எமது பிரதேசத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலமைகள் உருவாகியுள்ளன.

## எயிட்ஸ் / எச்.ஐ.வி வரலாறு, தொற்று வழிமுறை, பாதுகாப்பு முறை, அறிகுறிகள்.

அமெரிக்காவை சேர்ந்த நோய்கட்டுப்பாடு மற்றும் தடுப்புமையம் ஆண் ஓரினச் சேர்கை கொண்டிருந்த ஐந்து நபர்களிடம் ஒரு அரிய வகை நிமோனியாவை கண்டறிந்து அறிக்கையை (1981) வெளியிட்டது. இதுவே எயிட்ஸ் கண்டறிவதற்கான முதல் ஆவணமாகும்.

இவ்வாறாக எயிட்ஸ் நோய் 1981 இல் அறியப்பட்டாலும் 1983இல் தான் பிரான்ஸ் நாட்டில் பாஸ்டர் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் முதன் முதல் நோயை உருவாக்கும் L.A.V வைரஸ் கிருமி என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் 1984இல் அமெரிக்காவில் உள்ள தேசிய புற்று நோய் நிறுவனம் இந் நோயை உருவாக்குவது HIV என்னும் வைரஸ் என்று உறுதிப்படுத்தியது.

1986இல் தான் தற்போது பயன்படுத்தப்படும் HIV வைரஸ் (Human Immune Deficiency Virus) அதாவது நீர்ப் பீடனக் குறைபாட்டு நோய் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

HIV – I, HIV – II என்ற இருவகை இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டவை HIV – I என்றும், பின்பு ஆபிரிக்க நாடுகளில் பழங்குடியினரிடையே கண்டுபிடிக்கப்பட்டவை HIV-II என்பதாகும் எயிட்ஸ் என்பதன் விரிவாக்கம், A-Acquired, I – Immume, D-Deficeny, S-Syndrome என்பதாக அமைகின்றது. தமிழில் நீர்ப்பீடன குறைபாடு என்று குறிப்பிடப்படுகின்றது.

எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதற்கு 84.9% பாலியல் தொடர்புகளே காரணமாக அமைவதைக் அவதானிக்க முடிகின்றது. பொதுவாக HIV மனித உடலில் உள்ள எல்லாத் திரவங்களிலும் படிந்திருக்கின்றது. இருந்தாலும் இரத்தம், விந்து, பெனண்ணுறுப்புக்களில் உருவாகும் திரவம், தாய்ப்பால் ஆகியவற்றாலும் பரவுகின்றது. தொற்றுள்ள குருதியை பாய்ச்சுதல், மாசடைந்த ஊசி புகுத்தி மற்றும் உபகரணங்களை சுத்தம் செய்யாமை மூலம் - 1.6% பரவுவதையும், 0.8% தாயிடம் இருந்து பிள்ளைகளுக்கும், 13.9% தன்னினச் சேர்க்கை மூலம் பரவுவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. மேலும் போதைப் பொருட்களை பாவனையின் போது சுத்தம் செய்யாத ஊசியை ஒருவருக்கொருவர் செலுத்துதல், அறுவைச்சிகிச்சையின் போது சுத்திகரிக்காத ஆயுதங்களை பயன்படுத்தல், கர்ப்பகாலம், தாய்ப்பாலூட்டும் காலங்களில் பிள்ளைகளுக்கும், கொனரியா, சிபலிஸ், ஹெர்பீஸ் போன்ற பாலியல் நோய் உள்ளவர்களுக்கு, பாலியல் உறுப்புக்களில் சிறுகாயங்கள் உள்ளவர்களுக்கும், பலரோடு உடலுறவு கொள்பவர்களுக்கும் இந் நோய்த் தாக்கம் நிகழ்வதற்கு அதிக சாத்தியங்கள் உள்ளன என்று வைத்தியர்களினால் சுட்டிக் காட்டப்படுகின்றன.

HIV தொற்றுள்ளவருடன் சாதாரணமாக பழக்க வழக்கங்களில் ஈடுபடுவதன் மூலமோ, கைகுலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல், விளையாடுதல், பிரயாணம் செய்தல், வியர்வை, கண்ணீர், சிறுநீர், முத்தமிடல், பொதுகழிப்பறை, படுக்கை பயன்பாடு, உணவுப் பாத்திரங்கள், நீச்சல்குளம், இருமல், தும்பல், நுளம்ப மூலமோ பரவாது. இருப்பினும் பொது இடங்களில் சவரம் செய்யப்பயன்படுத்தப்படும் சவர அலகுகளை புதியதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல், தேவையற்ற பாலியல் தொடர்புகளைத் தவிர்த்தல், நம்பிக்கைக்குரியவருடன் மட்டும் பாலியல் தொடர்வை ஏற்படுத்தல், பாதுகாப்பு முறைகளைப் பாவித்தல், உரிய முறையில் தொற்று நீக்கம் செய்யப்பட்ட ஊசி மற்றும் மருந்து உபகரணங்களை பயன்படுத்தல், பாலியல் சார்ந்த ஏனைய தொற்றுக்கள் ஏற்படாமல் பாதுகாத்தல், எயிட்ஸ் நோய்க்கான பாதுகாப்பு வழிமுறைகளாக ஓரளவு சாத்தியமான செயற்பாடுகளாக வைத்திய ஆலோசனைகளாக குறிப்பிடப்படுகின்றன.

எயிட்ஸ் நோய் ஏற்பட்டால் ஆரம்ப நிலையில் அறிகுறிகள் பெரும்பாலும் தென்படமாட்டாது. இருப்பினும் சிலரிடம் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் மூன்று – ஆறு வாரமளவில் வெளிப்படும். அத்துடன் உடல் நலக்குறைவு, காய்ச்சல், தலைவலி, உடல்சோர்வு, குமட்டல், வியர்வை, நடுக்கம், வயிற்றுப் போக்கு, நெறிகட்டுதல் (அக்குள், கழுத்து) போன்றவற்றை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டாலும் ஆரம்ப நிலையில் எச்.ஐ.வி தொற்றை இனங்காண்பது கடினமானதாகவே அமைகின்றது. தொற்றின் தீவிரமான அறிகுறிகள் தெரிய பல வருடங்கள் ஆகின்றன. இதனால் தொற்றுள்ளவரை இனங்காண்பதற்கு மிகச் சிறந்த முறை அவர்களிடம் எச்.ஐ.வி இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதே ஆகும்.

## எயிட்ஸ் / எச்.ஐ.வி பரவல் உலகளாவியரீதியிலும் இலங்கையிலும்.

எச்.ஐ.வி / எயிட்ஸ் பரவல் உலக சுகாதார அமைப்பின் (2006) அறிக்கை பிரகாரம் உலகளாவிய ரீதியில் எயிட்ஸ் தொடர்பான நோயினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 330 000. 39.5 மில்லியன் பேர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இதில் 17.7 மில்லியன் பெண்களாகவும், 2.3 மில்லியன் குழந்தைகளாகவும் உள்ளனர் 2006இல் 2.9 மில்லியன் இறப்புக்கள் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடம் 5 மில்லியன் புதிய எச்.ஐ.வி தொற்றுக்களும், 3 மில்லியன் இறப்புக்களும் ஏற்பட்டு வருவதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

உலகில் ஆபிரிக்காவின் சகாரப் பகுதி எயிட்ஸ் நோயினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. 2007 இல் இப்பகுதியில் 68% எயிட்ஸ் உடன் வாழ்பவர்களாகவும், 76% எயிட்ஸினால் மரணமடைந்தவர்களாகவும் குறிப்பிடப்படுகின்றது. பின்பு 1.7 மில்லியன் புதிய தொற்றுக்களும், எச்.ஐ.வியுடன் வாழ்வோர் 22.5 மில்லியன் என உயர்வடைந்துள்ளது. அப்பகுதியில் 11.4 மில்லியன் குழந்தைகள், அநாதையாக்கப் பட்டவர்களையும், 61% பேர் பெண்களையும் உள்ளடக்கியிருந்தது. உலகில் அதிகளவில் எச்.ஐ.வி நோயாளர்களை தென்னாபிரிக்காவும், அதனைத் தொடர்ந்து நைஜீரியாவும், இந்தியாவும், கொண்டுள்ளதை தரவுகளின் பகுப்பாய்வுகள் புலப்படுத்துகின்றன. இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் 2005 புள்ளி விபரப்படி 52030 பேர் இந் நோய் உள்ளவர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையை பொறுத்தமட்டில் 1986இல் வெளிநாட்டவர் ஒருவர் இந்நோய் தொற்றுக்கு ஆளாகி இருந்தமை இனங்காணப்பட்டது. பின்னர் 1987இல் இலங்கையைச் சேர்ந்தவர் தொற்றுக்கு உள்ளானார். 2000இல் எச்.ஐ.வி தொற்றுக்கு 800 பேரும் (ஆண் 512, பெண் 353) எயிட்ஸ் நோயாளராக 246 பேரும், இறந்தவர்களாக 185 பேரும் அதில் 62 பேர் வெளிநாட்டவர்களாகவும் கற்பத்தில் 22 பேர் தொற்றுக்குள்ளாகியவர்களாகவும், மதிப்பீடு செய்யப்பட்ட தொற்றுக்குள்ளானவராக 5000பேர் என புள்ளி விபரங்கள் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்மாவட்டத்தை பொறுத்த மட்டில் யாழ்போதனா வைத்தியசாலையில் STD unit புள்ளி விபரப்படி (28.09.2010) எச்.ஐ.வி நோயாளராக 41 பேரும், உயிருடன் 18 பேரும், இறந்தவர்களாக 23 பேர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2007 அறிக்கையில் 36பேர் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களினால் தொற்றுக்கு உட்பட்டவர்களாகவும் 02 பேர் உள்ளூரில் தொற்றுக்குட்பட்டோராகவும் சுட்டிக் காட்டுகின்றது.

## யாழ் மாவட்டம், மாறிவரும் சமூக சூலில்ன் இயல்கும், பரவலுக்கான காரணிகளும்.

யாழ் மாவட்டத்தை பொறுத்த மட்டில் சமூகச் சூழல் என்பது பிரதேச அடிப்படையிலும், பௌதீக சமூக கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களிலும் தனித்துவமான இயல்புகளை கொண்டமைந்தது. சமூகச் சூழல் பிரதானமாக போரியல் தாக்கப் பின்னணியில் தாக்கங்களுக்கு உட்பட்டும், நிலையற்ற சூழல் தன்மைகளைக் கொண்டும், மாற்றங்களுக்கும் உட்பட்டும், இருந்து வந்துள்ளதை உணர முடிகின்றது. இலங்கையில் முதல் முதலில் எயிட்ஸ் தொற்று இனங்காணப்பட்ட (1986) காலப்பகுதி முதல் இன்றுவரை யாழ்மாவட்ட சமூக சூழல் போர்த்தாக்க விளைவுகளுக்குள் உள்ளடக்கிய காலப்பகுதியாக இருந்து வந்துள்ளதை ஒப்பீட்டு நோக்க முடிகின்றது.

சமூகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு பல்வேறு காரணிகள் நேரடியாகவும், மறைமுகாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. எமது மாவட்டத்தின் பௌதீக அமைவிடம் அதாவது புவியியல் ரீதியில் குடாநாடாக அமைந்து ஒரே ஒரு தலைவழிப் பாதை மூலம் ஏனைய நிலப்பிரதேசத் தொடர்பை கொண்டு இருப்பதுவும், சார்பமைவிட ரீதியில் தென் இந்திய பிரதேசத்தை அண்மித்த வகையில் அமைவிடத்தை கொண்டிருப்பதுவும், பிராந்திய ரீதியில் வல்லரசுகள் செல்வாக்குச் செலுத்த முனையும் நாடாகவும், தென்னிந்திய குடாநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் புராதன காலம் முதல் இருந்து வந்துள்ளமை. மீன்பிடித் தொழில் ரீதியான தொடர்புகளுக்கும், அரசியல் ரீதியான காரணிகளினால் மூன்று தசாப்தத்திற்கு மேற்பட்ட இன முரண்பாடுகள். தரைவழி, கடல்வழி, தொடர்பு நிலைகளில் மட்டுப்பாடுகளையும், தடைகளையும் ஏற்படுத்தியிருந்தன. இடப்பெயர்வு, குடிபெயர்வு அதிகரிக்க காரணமாகின. அகதி வாழ்வு, புலம்பெயர்வு என புதிய வாழ்வியல் மாற்றங்களை உருவாக்கின. இவற்றினால் சமூகத் தொடர்பு நிலைகளில் மாற்றங்கள் வலுப் பெறலாயின.

மிக அண்மையில் எமது சமூக சூழலில் நீண்டகாலமாக இருந்து வந்த யுத்த சூழலில் ஓர் அமைதியான நிலமை உருவாக்கப்பட்டு, அரசியல், பொருளாதார சமூகரீதியில் பல்வேறு மாற்றங்கள் அபிவிருத்தி நோக்கிய வகையிலும் மீள் கட்டுமான நிலைகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குடாநாட்டில் சமூக சூழல் தன்னகத்தே புதிய சூழமைவுகளை உருவாக்கியுள்ளன. அந்தவகையில் மாறிவரும் சூழலின் இயல்புகளாக பின்வவன எச்.ஐ.வி / எயிட்ஸ் நோய் பரவலுடன் நேரடி, மறைமுகத் தொடர்புகளை உருவாக்குவனவாக அமைகின்றன.

- தரைவழிப்பாதை திறக்கப்பட்டு ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புகள் விரிவாக்கமடைந்து வருகின்றமை.
- தடுப்பு முகாம், அகதிமுகாம் வாழ்க்கை நிலமைகள்.
- பல்தேசிய கம்பனிகள், முகவர்களின் வருகை
- உல்லாச விடுதிகள் அதிகரிப்புக்கள்
- இடம் பெயர்ந்தவர்கள், குடிபெயர்ந்தவர்கள் மீள் வருகை தரல்
- தென்பகுதி உல்லாச பிரயாணிகளின் மிகை அதிகரிப்புக்கள்,
- தெருவோர அங்காடிகளின் அதிகரிப்பு
- நடமாடும் தென் இலங்கை தென்னிந்திய வியாபாரிகளின் விரிவாக்கங்கள்
- திட்டமிடப்படாத அல்லது பலவீனமான குடியேற்றத் திட்டங்கள் இடம் பெறுதல்
- தொழில் வாய்பைத் தேடி இளைஞர், யுவதிகள், பல்வேறு பிரதேசங்களுக்கு அதிகளவில் ஈடுபடுத்தப்படுதல்
- போதைவஸ்துப் பயன்பாடு அதிகரித்துள்ளமை
- விபச்சார தொழில் நடவடிக்கைகளின் விரிவாக்கங்கள்
- வெகுசன தொடர்பு ஊடகங்களின் அதீத பயன்பாடுகளும். செயற்பாடுகளும்.
- புலம் பெயர்வு, இடம்பெயர்வு குடாநாட்டு திருமண உறவு அதிகரிப்புக்கள்.
- துரித அபிவிருத்தி முனைப்புக்கள்.
- போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட விதவைகள், அனாதைகளின் அதிகரித்த போக்குகள், சமூகமட்டத்தில் உள்ளமை..

இவ்வாறான சமூக சூழலின் மாற்றங்கள் எயிட்ஸ் / எச்.ஐ.வி பரவலுடன் தொடர்புபட்டமைகின்றது. இந்நோயின் தாக்க வேகத்தையும் பரவலாக்கத்தையும் தூண்டும் காரணியாகவும், நோயினை எதிர்கொள்வதற்கான சவால்களை உருவாக்கும் காரணியகளாகவும் இனங்காணக் கூடியதாக உள்ளது.

இந்நோயின் விரிவாக்க எல்லைகளை வரையறை செய்வது, அவற்றை குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுப்படுத்திய வகையில் இனங்காண்பது என்பதுவும், பரவலை தீர்மானிப்பது, கட்டுப்படுத்துவது என்பனவும் கடினமானது. எனினும் இந்நோய் பரவல் பல்வேறுபட்ட காரணிகளின் பின்னணியினால் வேறுபட்ட நிலையை அடைகின்றன.

நோய் பரவலாக்கத்தில் மிகை சனத்தொகை அதிகரிப்பு, பாலியல் தொழிலாளர் அதிகரிப்பு, உலகமயமாக்கல் நவீனத்துவம், தாராளமயமாக்கல், திறந்த பொருளாதார பின்னணிகள் வெளிநாட்டு சுற்றுலாத்துறை விரிவாக்கங்கள், இளவயது தொழிலாளர் அதிகரிப்பு, உள்ளூர் வெளியூர் குடிபெயர்வுகள், மட்டுப்பாடான சுகாதார ஒழுங்குகள், பலவீனமான தொடர்பு

ஊடக அறிவு போட்டி சமூக விரிவாக்கங்கள் போன்றன எயிட்ஸ் / எச்.ஐ.வி தொற்றுக்கான பொதுக் காரணிகளாக சுட்டிக் காட்டப்படுகின்றன.

## எயிட்ஸ் / எச்.ஐ.வி எதிர் கொள்வதற்கான சவால்கள்

யாழ்மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட சமூக சூழல் நிலவரத்தின் இயல்புகளில் நின்று எயிட்ஸ் /எச்.ஐ.வி நோய் பரவுகையை தடுப்பது குறைவடையச் செய்வது என்பது ஒட்டு மொத்த சமூகத்திற்குமான சவாலாகவே நீண்டகால நோக்கில் அமைகின்றது. சவால்களை எதிர்கொள்வதற்கான செயல் முனைப்புகள் தனிப்பட்ட ரீதியிலும், அரசமற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன மட்ட நிலைகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. சமகால சமூக மாற்ற இயல்புகளும் இந்நோய் பரவலாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக சுட்டிக் காட்டக் கூடியவை.

எயிட்ஸ் நோயினை எதிர் கொள்வதில் உள்ள சவால்கள் என்பது தனிப்பட்ட நபர் சார்ந்த வகையிலும், சமூக சார்பு நிலையிலும், நிறுவன மயப்பட்ட அமைப்புகளின் செயற்பாடுகளின் அடிப்படையில் இனங்காணப்படக் கூடியவை.

- எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்துவதில் அல்லது எதிர் கொள்வதில் தனிமனித விழிப்புணர்வு இன்மை, சமூகம் மீதான பொறுப்புணர்வு அற்ற தன்மை அதாவது சமூகப் பிரக்ஞை அற்ற தன்மை பிரதான சவாலாக அமைகின்றது.
- குடும்ப அமைப்பை பொறுத்த மட்டில் ஓர் ஒழுங்கமைந்த வகையில் தனித்துவமாக இயங்காமல் மேலைமயமாக்கல் நிலை நின்று எமது சமூக குடும்ப அமைப்பபை தீர்மானிக்க அல்லது வடிவமைக்க முனைவது நோயை எதிர்கொள்வதில் தடைகளை உருவாக்குகின்றது.
- பலவீனமடைந்துள்ள குடும்ப அமைப்பு அதன் பின்னணியில் அமைந்த குடும்ப ஆதரவற்ற நிலமைகள், பொருளாதார இடர்பாடுகள் சமூக பொருத்தப்பாடற்ற தொழில் நிலைகளை தெரிவதற்கு தூண்டுதலாக அமைகின்றன.
- நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த தரைவழிப்பாதை, வெளிப்பிரதேச தொடர்புகளை மட்டுப்படுத்தியிருந்தன. தந்போது ஏற்பட் மாற்றங்கள் தொடர்பு நிலைகளை தாராளமயப்படுத்தியுள்ளது. இவ்வாறான திடீர் மாற்றங்கள் உளவியல் ரீதியில் தவறான உள்வாங்கல்களை ஏற்றுக் கொள்வதுடன் நோய்த் தொற்றுக்கும் சவாலாக அமைகின்றது.
- எயிட்ஸ் நோயை எதிர்கொள்வதற்கான சவால்களை உருவாக்குவதில் தடுப்பு முகாம்கள், அகதிமுகாம் வாழ்க்கை இடைத் தங்கல் முகாம் நிலமைகள் அவ்வற்றின் உட்கட்டமைப்பு வசதியீனங்கள் அங்கு நிலவும் ஆரோக்கியமற்ற தொடர்பு நிலைகள் சமகாலத்தில் முதன்மை பெறுகின்றது.
- பல்தேசிய வியாபாரக் கம்பனிகள்,அதன் முகவர்கள் வருகையும் விடுதி விரிவாக்கங்களும் பொருளாதார நோக்காக அமைந்தாலும் சமூக ஊடாட்டகங்களின் விளைவுகளினால்

இந்நோய் மாறிவரும் சமூகச் சூழலில் இந்நோய் தொடர்பில் சவால்களை உருவாக்குகின்றன.

- பாலியல் ரீதியான நோய்த் தொற்றுக்களை எதிர்கொள்வதில் எமது பிரதேச மக்களுக்கும், புலம் பெயர் மக்களுக்கும் இடையிலான திருமணத் தொடர்புகள், இடைவினை உறவுகள் பலமான சவால்களை உருவாக்குகின்றன.
- மாறிவரும் சமூகச் சூழலில் உள்ளூரில் வேலையின்மையும், வெளியூர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நாட்டமும் இளைஞர் யுவதியினரிடையே அதீத விருப்பத் தெரிவாக அமைதல் பன்நாட்டு கலாசார ஊடாட்டங்களுக்கு வழிவகுத்தல் தவிர்க்க முடியாது உள்ளமையும் இந் நோய்த் தொற்றுக்கு சவாலாக அமைகின்றது.
- உலகளாவிய ரீதியில் எயிட்ஸ் நோய் பரவலில் இரண்டாம் நிலையிலுள்ள இந்திய பிரதேசத்திற்கு அருகில் யாழ் குடாநாடு அமைந்துள்ளமையும், போரியல் தாக்கத்தினால் எமது மக்கள் அங்கு அகதிகளாக வாழ்கின்றமையும், தற்போது ஏற்பட்டுள்ள சமூக சூழ்நிலை நிமித்தம் மீளவும் திரும்பி வருகின்ற நிலமைகள் அதிகரித்தல் நோயை எதிர் கொள்வதற்கு இடர்களை விளைவிக்கின்றன.
- யுவதிகள் தொழில்களுக்காகவும், வீட்டுப்பணி வேலைகளுக்காகவும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தங்களுக்குள்ளமை எமது பிரதேசத்திற்கு எயிட்ஸ் தொற்றுக்கு இன்ற வரை சவாலாக விளங்குகன்றது.
- மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எமது சமூகத்தில் தற்போது துரிதமாக இடம் பெற்று வருகின்றது. இவ்வாறு மீள்குடியேறும் குடும்பங்கள் மத்தியில் வயது வேறுபாடின்றி பாலியல் சார்ந்த தொடர்புகள் அதிகரித்து வருகின்றமை எதிர்காலத்தில் எச்.ஐ.வி பரவலில் புதிய சவால்களை உருவாக்கும் எனலாம்.
- சமூகத்தில் நிலவும் குறைந்த குடும்ப வருமான மட்டங்கள் HIV தொற்றினை எதிர்கொள்வதற்கு என்றுமே சவால்களாகவே அமைகின்றது. குறிப்பாக இவ்வாறான குடும்பங்கள் வருமானத்தேவை கருதி பாலியல் சார்ந்த தொழில்களில் ஈடுபட முனைப்புக் காட்டுகின்றார்கள்.
- பாலியல் சார்ந்த உணர்வுகளை தூண்டுவதில் எந்த ஒரு சமூகத்திலும் வெகுசன ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. பாலுறவைத் தூண்டும் ஊடக அறிக்கையிடல் உள்ளடக்கங்கள் மற்றும் தவறான ஊடகத் தெரிவுகளும் மக்கள் மத்தியில் நிலவும் ஊடக அறிவின்மைகளும் எயிட்ஸ் தொடர்பான சவால்களை அதிகரிக்ககச் செய்கின்றன.
- எமது மாவட்டத்தில் குடிசன விகிதாசாரத்தில் பெண்களின் எண்ணிக்கை, திருமணமாகாத பெண்களின் எண்ணிக்கை, விதவைகள், தபுதாரர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியில் உயர்வாகக் காணப்படல் HIVயை எதிர்கொள்வதில் சவால்களை உருவாக்குகின்றன.
- எயிட்ஸை எதிர்கொள்வதில் போக்குவரத்து துறைசார்ந்த காரணிகள் முக்கிய சவால்களாக அமைகின்றன. குறிப்பாக போக்குவரத்து சாரதிகளின் விழிப்புணர்வு அற்ற தன்மை, குடிபானப் பயன்பாடுகள், பாதுகாப்பற்ற முறையில் தவறான இடங்களில்

தங்குதல், குடுபங்களை நீண்ட காலமாகப் பிரிந்து பிரயாணங்களில் ஈடுபடல் காரணங்களாக அமைகின்றது.

- சமகாலத்தின் தென்பகுதி மக்களின் அதீத வருகை எமது சமூகத்துடன் ஊடகங்களை அதிகரிக்கச் செய்துள்ளன. மக்களின் வாழ்விடங்களுக்கு மத்தியில் விடுதிகளில் தங்குதல், தரமற்ற தங்குமிட வசதிகள் போன்றன இந்நோயை எதிர் கொள்வதில் சவால்களை உருவாக்குகின்றன.
- உள்ளூரில் கல்வியைப் பெறுவதற்கான வசதி வாய்ப்பின்மை மாணவர்களை வேறு பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தங்கள் உருவாக்குதல் புதிய சவால்களாக அமைகின்றது.
- சமூக சூழலில் வேகமான மாற்றங்களினால் பாடசாலை மாணவர்களின் இளவயதினரின் பொருத்தமற்ற சகபாடிகளின் சேர்க்கைகள் பாலியல் சார்ந்த செயற்பாடுகளில் நாட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றமை மற்றும் குடும்ப மட்டத்தில் பாலியல் சார்ந்த கருத்தாடல்கள், பாலியல் சார்ந்த அறிவியல் கருத்துப் பகிர்வுகள் கீழ்நிலையில் நிலவுதல் இந் நோயை எதிர்கொள்வதில் சவால்களாக அமைகின்றன.
- பாடசாலை மட்டத்தில் கலைத்திட்டத்தினூடாகவும், இணைக்கலைத்திட்டத்தினூடாகவும் எயிட்ஸ் தொடர்பான விளக்க நிலைகளில் போதாமைகள் மாணவப் பருவத்திலும், எதிர்காலத்தில் அவர்களின் குடும்ப வாழ்க்கையிலும் இந்நோய் தொடர்பில் அறியாமைகளை ஏற்படுத்துவதுடன் அவற்றை கட்டுப்படுத்துவதிலும் சவால்களை ஏற்படுத்தி விடுகின்றன.
- வைத்தியசாலைப் பணியாளரிடையே நிலவும் நோய்த் தொற்று வழிமுறைகள் தொடர்பான பணிகளில் பலவீனமான தன்மைகள், வைத்தியசாலையின் தரமற்ற செயற்பாடுகள் HIV எதிர் கொள்வதில் முக்கிய சவாலாக அமைகின்றது. குறிப்பாக இரத்தப் பரிசோதனை, இரத்த மாற்றீடு, பிரசவ செயற்பாடுகள் போன்றவற்றில் இவற்றை அவதானிக்க முடிகிறது.
- பொதுச்சுகாதார பரிசோதகர்களின் பணித்துறை சார்ந்த செயற்பாடுகளான: பொதுமக்களிடையே இந்நோய் தொடர்பான விளக்கங்கள், தடுப்பு முறைகள், விழிப்புணர்வு செயற்பாடுகள் ஆகியவற்றில் குறைபாடுகள் நிலவுதல் இந்நோய் ஆரம்ப நிலையில் பரவலடைவற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன.
- எமது பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட சமூக சூழ்நிலைகளினால் பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த தெருவோர நடைபாதை வியாபாரிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை எயிட்ஸ் தொடர்பான ஆபத்து நிலைகளை வலுவாக்கியுள்ளன.
- மேலும் நோயாளர்களை பராமரிக்கும் பராமரிப்பாளரை முகாமை செய்வதில் உள்ள குறைபாடுகள் மற்றும் அவர்களின் பொருத்தமற்ற பாலியல் சார்ந்த தொடர்புகள் அதிகரித்தல் புதிய சவால்களை எயிட்ஸ் நோய் தொடர்பில் எதிர் கொள்ளச் செய்கின்றன.

- எமது பிரதேசத்தில் திட்டமிட்ட வகையில் பிரதேசத்தின் தனித்துவத்தையும், பண்பாட்டுச் கலாச்சாரத்தை சிதைக்கும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பாலியல் தொழில்த்துறை சார்ந்த விரிவாக்கங்கள் நீண்ட காலப் நோக்கில் சவால்களை வலுப்பெறச் செய்கின்றன.
- பாலுறுப்புக்களில் ஏற்படும் நோய்த் தாக்கங்களை வெளிப்படுத்துவதிலுள்ள உளவியல் சார்ந்த நிலைப்பாடுகள் மற்றும் பாதுகாப்பான பாலியல் தொடர்பு பற்றிய அறிவின்மை, நாட்டமின்மை இந்நோய்த் தாக்கத்தில் பல்வேறு விளைவுகளை எதிர்கொள்ளச் செய்கின்றன
- ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளில் இந்நோய் தொடர்பான அறிக்கையிடலுக்கு முன்னுரிமை வழங்கப்படாத நிலைமைகள் வெகுசன மட்டத்தில் இந்நோய் தொடர்பான அறிவூட்டல் சார்ந்த சவால்கள் உருவாக காரணமாகின்றன.
- பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் அறிவூட்டல்களை வழங்கக் கூடிய சமுதாய கல்விச் செயற்றிட்டங்கள், முறைசாரா கல்விச் செயற்பாடுகள், சமுதாய வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டாமை இந்நோயை எதிர்கொள்வதில் இடர்களையும் சவால்களையும் ஏற்படுத்துகின்றன.
- அதிகரித்து வரும் சிகை அலங்கரிப்பு நிலையங்களும் அதன் தரமற்ற ஊட்கட்டமைப்பு வசதிகள், அவர்களிடம் நிலவும் இந்நோய் தொடர்பான விளக்கநிலைமைகள், விழிப்புணர்வு அற்ற நிலைகள் தொற்றுக்கான சந்தர்ப்பங்களையும் சாவால்களையும் பரவலாக்கின்றன.
- வெளியூர் ஊள்ளுர் பிரயாணிகளை நுழைவாயிலில் உட்பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத நிலைமைகள், சட்டரீரியில் அவற்றை முன்னெடுக்காமை, அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பலவீனமான நோய்த் தொற்று தொடர்பான செயற்றிட்டங்கள், சுகாதாரப்பராமரிப்பு, ஆரோக்கிய வாழ்வு பற்றிய அறிவீனங்கள் நோய் பாதிப்புக்குள்ளானவரை இனங்காண்பதில் உள்ள குறைபாடுகள், மற்றும் அவர்களை விசேடமாக வைத்துகப் பராமரித்தல், ஆதரவளித்தல் போன்றன எயிட்ஸை எதிர்கொள்வதற்கான சவால்களை பலபரிமாணங்களில் உருவாக்குகின்றன
- மேலும் எயிட்ஸ் நோய் தொடர்பான உரிமைகள், சட்டங்கள் எமது பிரதேசத்தில் உரிய வகையில் ஒழுங்குபடுத்தப்படாமை, திருமண விடயங்களில் விழிப்புணர்வு, விசாரணைகள், பரிசோதனைகள் அற்ற முறைகளில் முடிவுகளை எடுத்தல், பெற்றோர் ஆசிரியர் பிள்ளை என்ற ஒழுங்கிணைந்த கவனிப்பு, வழிகாட்டல் நிலைகள் வலுப் பெறாமை எமது சமூகத்தில் இந்நோய் தொடர்பில் சவால்களை உருவாக்குகின்றன.

- எமது சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டு கலாசார புறச் சூழ்நிலைகள் பல்வேறு கட்டுப்பாடுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாக்கியுள்ளன இவற்றுக்கும் சமகால துரித மாற்றங்களுக்குமிடையில் ஓர் ஒருங்கிணைந்த இசைவான வாழ்வியல் முறையை உருவாக்குவது என்பது முக்கியமாகின்றது. அத்துடன் பெண்களுக்கான மறுவாழ்வுத் திட்டம், சுய தொழில் வாய்ப்பபுக்கள், பால் சமத்துவ நிலமைகள், மீள்வைரசுக்கு எதிரான சிகிச்சை முறையில் உள்ள குறைபாடுகள், இரத்ததானம் இரத்த வங்கிகளின் செயல்முறைகள் தொடர்பான குறைபாடுகள் இந்நோய் தொடர்பில் பல்வேறு சவால்களை ஏற்படுத்துகின்றன.
- HIV தடுப்பினை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கு மக்களிடம் உயர்வான பிரதிபலிப்புக்களையோ, பின்னூட்டல்களையோ பெறுவதில் உள்ள மந்த நிலைகள் இந்நோய் தொடர்பான செயல்முனைப்புக்களை பலவீனமாக்குகின்றன. குறிப்பாக அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் விளம்பரங்கள், நிகழ்வுகள், போட்டிகள், அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை மக்கள் எந்த அளவிற்கு உள்வாக்கிக் கொள்கிறார்கள் என்பது முக்கிய சவால்களாக அமைகின்றன.

## முடிவுரை

யாழ்மாவட்டத்தின் சமூகச் சூழல் மாற்றங்கள் என்பது தனித்துவமான அம்சங்களை கொண்டது மாறிவரும் சமூக சூழலை எதிர்கொள்வது என்பது எமது பிரதேசத்தில் உள்ள அனைவரினது சவாலாக தற்போது முதன்மை பெற்றுள்ளது. எமது சமூகத்தின் அனைத்துக் கூறுகளிலும் சவால் நிலைகள் உருவாகியுள்ளன. அத்தகைய பின்னணி சூழமைவுகளில் எயிட்ஸ் / எச்.ஐ.வி தொற்று நிலைகளும், அவற்றின் விளைவுகளும் நீண்டகால பாதிப்புக்களை ஏற்படுத்துவனவாக உணரப்படுகின்றன. சமூக நிலைசார்ந்த எண்ணங்களும் தனிமனித விழுமிய விருத்தி நிலைகளும், உளவியல் சார்ந்த ஆரோக்கிய வெளிப்பாடுகளுமே இந் நோயை எதிர்கொள்வதற்கான உள்ளார்ந்த தகவு நிலைகளை உருவாக்கும். அதாவது இயல்பு நிலைக்கு ஊடான இயங்காற்றல்களே முக்கியமாகின்றது.இவற்றுக்கான உந்தல்களை மட்டுமே அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் செயற்றிட்டங்கள் வழங்க முடியும். இந் நோயை எதிர்கொள்வதற்கான சவால்களை விருத்தியாக்கல் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆளுமை சார்ந்த நிலையூடாகவே சாத்தியமாக அமையும்.

website http://www.jaffnahealth.org